# மணிமேகலைகாட்டும் இயற்கை பேரிடர்கள்.

எஸ்.சிங்கநெஞ்சம்
இயக்குனர்(ஓய்வு)
இந்திய புவியியல் ஆய்வுத்துறை
சென்னை

“இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி”என்பர். தாம் தோன்றிய காலத்தின் விழுமியங்களை மட்டுமல்ல, அவலங்களையும் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. பஞ்சம், பசி, பட்டினி, பிணி போன்ற அவலங்கள் மணிமேகலையில் சித்தரிக்கப்பட்டுள்ளது போல் வேறு எந்த நூலிலும் விரிக்கப்படவில்லை.. இதற்குக் காரணம் என்ன? இதனால் நாம் அறிவது என்ன?மணிமேகலை காப்பியத்தில் ‘பசி’ எனும் சொல் நாற்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் ஆளப்பட்டிருக்கிறது என்பது நமக்கு வியப்பை அளிக்கிறது. (*http://tamilconcordance.in*) காப்பியத்தில் உள்ள முப்பது காதைகளில் 14 காதைகளில் பசி பற்றிப் பேசப்படுகிறது.அள்ள அள்ள குறையாத அட்சயப் பாத்திரம் அமுதசுரபி, ஒருமுறை உண்டால் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பசியைப் போக்கும் நாவற்கனி, போன்ற அதீத கற்பனைகள் உருவாக என்ன காரணம்?பசியை ,‘பிணி’ என்றும்,‘பாவி’ என்றும் வன்சொற்களால் வர்ணிக்கிறார் சீத்தலை சாத்தனார். உடலை துன்புறுத்துவதால் ‘பிணி’ என்றும், பெரும் கேடு விளைவிப்பதால் ‘பாவி’ என்றும் சொன்னார் போலும். பசிப்பிணி என்னவெல்லாம் செய்யும் என அவர் பட்டியலிடுவதைப் பாருங்கள்.

“குடிப் பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும் புணை விடூஉம்
நாண் அணி களையும் மாண் எழில் சிதைக்கும்
பூண் முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
**பசிப் பிணி** என்னும் பாவி”. 11 (76 — 80)

புறநானூற்றில் 173 ஆவது பாடலில் ‘பசிப்பிணி’ எனும் சொல் ஆளப்படுகிறது. அதை சாத்தனார் படித்திருப்பார் என்றே தோன்றுகிறது. அந்தப் பாடலில் வரும் ‘பழுமரம் புள்ளிமிழ்ந்தன்ன’ எனும் உவமையை இவர்,
“பழு மரத்து ஈண்டிய பறவையின் எழூஉம்
இழுமென் சும்மை இடை இன்று ஒலிப்ப “என்று அப்படியே பயன்படுத்துகிறார்.

பசியின் கொடுமையை உணர்த்துவதற்காக நாய் கறி தின்ன முயன்ற விசுவாமித்திரன் கதையைக் கூறுகிறார் புலவர்.

“மன் உயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அரசு தலைநீங்கிய அரு மறை அந்தணன்
இரு நில மருங்கின் யாங்கணும் திரிவோன்
**அரும் பசி** களைய ஆற்றுவது காணான்
திருந்தா நாய் ஊன் தின்னுதல் உறுவோன்" 11 (83 - 87)

இங்கே, அரசு தலை நீங்கிய அருமறை அந்தணன் என்பது, விசுவாமித்திரனைக் குறிக்கிறது. இந்தக் கதை மனு நூலில் பத்தாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளதாக உரையாசிரியர்கள் எழுதுகின்றனர்.காப்பியத்தில் பத்தாவது காதை, மணிமேகலா தெய்வம் வந்து நாயகிக்கு மந்திரம் உரைத்த கதையை சொல்கிறது. என்ன மந்திரம்?பணக்காரியாக்கும் மந்திரமல்ல, பசி அறுக்கும் மந்திரம்.

"கேளாய் …….
மக்கள்யாக்கைஉணவின்பிண்டம்
இப்பெருமந்திரம்**இரும்பசி**அறுக்கும்'என்று
ஆங்கு அது கொடுத்து ஆங்கு அந்தரம் எழுந்து" 10 (89 -92)

பசியினால் தவிக்கும் இயலாத மக்களின் பசியினைப் போக்க உணவு அளிப்பவர்கள்,அவர்களுக்கு உயிரினைக் கொடுப்பவர்கள் ஆவார்கள் எனும் காப்பியம். தொடர்ந்து, 'அமுதசுரபி எனும் அட்சய பாத்திரமே அந்த 'ஆர் உயிர் மருந்து' என்றும் சொல்லிச் செல்கிறது.

"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறம் விலைபகர்வோர்
ஆற்றா மாக்கள் **அரும் பசி** களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" 11 (92 — 96)

"ஆர் உயிர் மருந்து ஆம் அமுதசுரபி எனும்
மா பெரும் பாத்திரம் மடக்கொடி! பெற்றனை
மக்கள் தேவர் என இரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்
பசிப் பிணி தீர்த்தல்' என்றே அவரும்
தவப் பெரு நல் அறம் சாற்றினர் ஆதலின்
மடுத்த தீக் கொளிய **மன் உயிர்ப் பசி** கெட
எடுத்தனள் பாத்திரம் இளங்கொடி தான்" 12 (114 — 121)

தொடர்ந்து,கிழிந்த ஆடைகளை உடுத்திக் கொண்டு, வெயில் - புயல் பாராமல் பசியால் வயிறு காய உழைப்போரின் துயர் தீர்க்க இந்தப் பாத்திரம் கொண்டேன் என்கிறாள் மணிமேகலை .

"வெயில் என முனியாது புயல் என மடியாது
துய்ப்போர் தம் மனை துணிச் சிதர் உடுத்து
வயிறு **காய் பெரும் பசி** அலைத்தற்கு இரங்கி" 11 (108 -110)

இனி, வழிப் பயணம் செய்தோரும் பெரும் பசியால் வயிறு காய்ந்து வாடி, அம்பலத்தில் உறங்கியிருந்த ஆபுத்திரனை எழுப்பி உணவு கேட்கின்றனர்.

"ஆர் இடை உழந்தோர் அம்பலம் மரீஇ
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி
வயிறு **காய் பெரும் பசி** மலைக்கும்" என்றலும் 14 (4 — 6)

மயங்கித் தவித்த ஆபுத்திரன் முன் தோன்றி சிந்தாதேவி அட்சய பாத்திரம் அருள்கிறது. அதைக் கொண்டு அரும்பசி தீர்க்கிறான் ஆபுத்திரன்.

“தான் தொழுது ஏத்தித் தலைவியை வணங்கி
ஆங்கு அவர் **பசி** தீர்த்து அந் நாள் தொட்டு
வாங்கு கை வருந்த மன் உயிர் ஓம்பலின்
மக்களும் மாவும் மரம் சேர் பறவையும்
தொக்கு உடன் ஈண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழு மரத்து ஈண்டிய பறவையின் எழூஉம்
இழுமென் சும்மை இடை இன்று ஒலிப்ப 14 (21 — 27)

மக்கள் மட்டுமல்லாது மாக்களும், புள்ளினமும் கூட பசி வயப்பட்டிருந்ததையும் இந்தப் பாடல் கூறுகிறது.

கடவுள் கொடுத்த கடிஞை வாயிலாக வருந்தி வந்தோரின் அரும்பசியை அகற்றியதாக ஆபுத்திரன், இந்திரனிடம் கூறுகிறான். இதோ பாடல்:

"இறைவன் ஆகிய பெரு விறல் வேந்தே
வருந்தி வந்தோர் **அரும் பசி** களைந்து அவர்
திருந்து முகம் காட்டும் என் தெய்வக் கடிஞை" 14 (43 — 45)

பசியின் கொடுமையை உணர்த்துவதற்காகவே விசுவாமித்திரன் நாய் கறி தின்ன முயன்ற கதையை காப்பியத்தில் சேர்த்திருக்கிறார் சாத்தனார். தொடர்ந்து காயசண்டிகையின் கதையும் பசியின் கொடுமையை விவரிக்கிறது. காயசண்டிகையை நமக்கு அறிமுகம் செய்யும் பாடல் ‘பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதையில் வருகிறது. இவள் வெம்பசி வேட்கையோடு திரிந்தாள் என்கிறது அந்தப் பாடல் .

“மாதவன் தன்னால் வல்வினை யுருப்பச்
சாபம் பட்டுத் தனித்துயர் உறூஉம்
வீவில் **வெம்பசி** வேட்கையொடு திரிதரும்
காயசண் டிகையெனும் காரிகை தானென்”.15 (86 - 89)

தொடர்ந்து உலக அறவி புக்க காதையில், காப்பிய நாயகியிடம், தான் கடும்பசி பட்டதாகக் காயசண்டிகை கூறுகிறாள்.

“இட்ட தாற்றாக் கட்டழற் **கடும்பசிப்**
பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால்” 17 (13 - 14)

அட்சய பாத்திரத்திலிருந்து அமுதம் உண்டதும், அவளின் வயிறுகாய் பெரும் பசி நீங்கியதை இந்தப்பாடல் பேசுகிறது.

“எடுத்த பாத்திரத் தேந்திய அமுதம்
பிடித்தவள் கையில் பேணினள் பெய்தலும்
வயிறுகாய் நீங்கி மற்றவள்
துயரம் நீங்கித் **பெரும்பசி** தொழுதனள் உரைக்கும்” 17 (17 = 20)

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பசி தீர்க்கும் கனியைச் சிதைத்தனையே என்று விருச்சிக முனிவன் காயசண்டிகையைச் சினக்கும் காட்சியை வரும் பாடல் காட்டுகிறது.

“அக்கனி யுண்டோர் ஆறீ ராண்டு
மக்கள் யாக்கையின் வரும்**பசி** நீங்குவர்

பன்னீ ராண்டில் ஒருநா ளல்லது
உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்'' 17 (39 - 42)

சினமுற்ற முனிவன் இட்ட சாபத்தால் காயசண்டிகையை யானைத்தீ எனும் கொடும் பசி நோய் பற்றுகிறது.இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து மீண்டும் அந்த நாவற்கனி பழுத்து அதை நான் எப்போது உண்கிறேனோ அப்போதுதான் உன் பசி நோய் நீங்கும் என்கிறான் முனிவன். இந்தப் பாடலில் பசியை உறுபசி என்கிறார் புலவர்.

''முந்நா லாண்டின் முதிர்கனி நானீங்கு
உண்ணு நாளுன்**உறுபசி** களைகென
அந்நா ளாங்கவன் இட்ட சாபம்'' 17 (45 -47)

இவ்வாறு சபித்துவிட்டு பசியினால் வாடியபடி இடம் அகல்கிறான் முனிவன்

**''வாடுபசி** உழந்து மாமுனி போயபின்'' 17 (49)

காயசண்டிகையின் பெரும்பசி அகற்ற அவள் கணவன், கனி, காய், கிழங்கு என அனைத்தும் கொடுத்தும். அவளால் பசியாற முடியவில்லை.

**''வயிறுகாய் பெரும்பசி** வருத்தும் என்றேற்குத்
தீங்கனி கிழங்கு செழுங்காய் நல்லன
ஆங்கவன் கொணரவும் ஆற்றே னாக'' 17 (57 -59)

''ஒவ்வொரு ஆண்டும் இந்திரா விழாவின் போது புகார் நகர் வரும் என் கணவர், பசியினால் நான் படும் துயர் கண்டு, பன்னிரண்டு ஆண்டுகள் எப்போது முடியும் என்று எண்ணிச் செல்வார். உன்னால் இன்று என் பசித்துயர் நீங்கியது''என்று மணிமேகலையிடம் மகிழ்ந்து கூறி வான்வழி படர்கிறாள் காயசண்டிகை..

''இந்திர கோடணை விழவணி வருநாள்
வந்து தோன்றியிம் மாநகர் மருங்கே
என்னுறு **பெரும்பசி** கண்டனன் இரங்கிப்
பின்வரும் யாண்டவன் எண்ணினன் கழியும்
தணிவில் வெம்பசி தவிர்த்தனை வணங்கினேன்
மணிமே கலையென் வான்பதிப் படர்கேன்'' 17 (69 - 74)

தன்பசி தீர்த்த மணிமேகலையை ஆங்குள்ள உலகஅறவிக்கு செல்ல வேண்டுகிறாள் காயசண்டிகை.. உலக அறவியில் பசிப்பிணியால் தவித்து பல ஊர்களிலிருந்து வந்தோர் வாடுவதை பாடல் சொல்கிறது.

''உலக வறவி ஒன்றுண் டதனிடை
ஊரூ ராங்கண் **உறுபசி** உழந்தோர்
ஆரும் இன்மையின் அரும்பிணி யுற்றோர்
இடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர்'' 17 (78 -83)

புகார் நகரில் மட்டுமல்லாமல் சுற்றியிருந்த ஊர்களிலும் பசிப்பிணி நிலவியது என்பதை இப்பாடலில் வரும் 'ஊர் ஊர் ஆங்கண்' உணர்த்துகிறது.

பசியால் தின்னப் பட்டுக்கொண்டிருக்கும் மக்களைக் காக்க, ஆபுத்திரன் கை அமுதசுரபியுடன் அறவி புகுகிறாள் மணிமேகலை; அங்கே ஊணொலி அரவம் எழுகிறது.

**''பசிதின** வருந்திய பைதல் மாக்கட்கு
அமுத சுரபியோ டாயிழை தோன்றி
ஆபுத் திரன்கை அமுத சுரபியிஃது
யாவரும் வருக ஏற்போர் தாமென

ஊணொலி அரவத் தொலியெழுந் தன்றே
யாணர்ப் பேரூர் அம்பல மருங்கென்''. 17 (93 -99)

(இந்தப் பாடலின் இறுதி வரிகள் இரண்டும் ''யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந்தன்ன ஊணொலி அரவந்தானும் கேட்கும்''எனும் புறநானூற்று வரிகளை நினைவூட்டுகின்றன )

மேற்கண்ட காதையில் மட்டும், பசி, பசி, பசியென பத்துப் பாடல்களில் பசி பற்றிக் குறிப்பிடுகிறார் சாத்தனார்.அதுவும் வெறும் பசி எனக் கூறவில்லை, வெம்பசி, கடும்பசி, வயிறுகாய் பெரும்பசி, உறுபசி, வாடுபசி, தின்னும் பசி என அடைசொற்களோடு பசியைப் பழிக்கிறார் புலவர்.

அட்சய பாத்திரமான அமுதசுரபியிலிருந்து காயசண்டிகைக்கு அன்னம் அளிக்கும் முன், ஆதிரை நல்லாளிடம் அப் பாத்திரத்தில் அமுது பெறுகிறாள் மணிமேகலை; அமுதிட்ட ஆதிரை, ''பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென''என்று வாழ்த்துகிறாள்.

"அமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
பாரகம் அடங்கலும் **பசிப்பிணி** அறுகென
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென்" 16 (133 - 135)

'பாரகம் அடங்கலும்....' உலகின் பல பாகங்களிலும் அப்போது பசிப்பிணி இருந்ததோ?

மணிமேகலை காலத்தில் வானிலையில் ஏற்பட்ட பெரும் கோளாறுதான் பஞ்சம், பசி, பட்டினி, பிணி இவற்றிற்கெல்லாம் காரணம் என எண்ண இடமுண்டு. இதற்கான குறிப்புகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் காப்பியத்தில் அங்கும் இங்கும் காணக் கிடைக்கின்றன. இவற்றைப் பார்ப்பதற்கு முன் பஞ்சம் எங்கெல்லாம் ஏற்பட்டது; மக்கள் எப்படிப்பட்ட பிணிகளுக்கு ஆளாயிருந்தனர் என்பதை பார்க்கலாம்.

மதுரைப் பெருநகரில், கண் பார்வை இழந்தவர்கள், கேட்கும் திறன் அற்றவர்கள், முடமானோர், பிணியால் தவித்தவர்கள் என யாவரும் இருந்த செய்தியை, ஆபுத்திரன் திறன் உரைத்த காதையில் வரும் இந்தப் பாடலால் அறிய முடிகிறது.

**"காணார் கேளார் கால் முடப்பட்டோர்**
**பேணுநர் இல்லோர் பிணி நடுக்குற்றோர்**
யாவரும் வருக' என்று இசைத்து உடன் ஊட்டி
உண்டு ஒழி மிச்சில் உண்டு ஒடு தலை மடுத்து
கண்படைகொள்ளும் காவலன் தான் என் " 13 (111 - 115)

இனி, பூம்புகாரில் இருந்த உலக அறவியில்

"ஊர்ஊர் ஆங்கண் **உறு பசி** உழந்தோர்
ஆரும் இன்மையின் அரும் பிணி உற்றோர்" 17-080

என நோய்வாய்ப்பட்ட பலர் இருந்த செய்தியை காயசண்டிகை மணிமேகலையிடம் கூறுகிறாள். இந்த செய்தி, உலக அறவி புக்க காதையின் இறுதியில் காணப்படுகிறது.

தொடர்ந்து, கச்சி மாநகர் புக்க காதையில் வரும் இந்தப் பாடலையும் பாருங்கள்.

**"காணார் கேளார் கால் முடம் ஆனோர்**
**பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்**
**படிவ நோன்பியர் பசி நோய் உற்றோர்**
**மடி நல்கூர்ந்த மாக்கள் யாவரும் " 28 (222 - 225)**

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, மணிமேகலைக் காலத்தில் அல்லது மணிமேகலை காப்பியம் இயற்றப்பட்ட காலத்தில் பூம்புகாரில் மட்டுமல்ல, மதுரைப் பெருநகரிலும், காஞ்சி மாநகரிலும் மக்கள் பஞ்சத்தால் பரிதவித்தனர் என்று அறிய முடிகிறது. இதற்கான

சான்றுகளை, நூலில் தேடுவோம். புகாரைப் பற்றி நிறைய பேசியாகிவிட்டது ஆதலின், மதுரைக்குச் செல்வோம்.

பூம்புகார் நகரத்தின் பஞ்சம் பற்றி நிறைய பேசிவிட்டோம். அங்கு மட்டும்தானா பஞ்சம். இதோ மணிமேகலை காட்டும் மதுரைக் காட்சியைப் பாருங்கள்.

"பன்னீராண்டு பாண்டி நல் நாடு
மன் உயிர் மடிய மழை வளம் இழந்தது" 14 (55 - 56)

மண்ணில் உள்ள உயிர்கள் எல்லாம் வருந்தி அழியும் அளவிற்கு பெரும் பஞ்சம் ஒன்று மதுரையிலே நிலவியது என்று, பாத்திர மரபு கூறிய காதையில் வரும் இந்தப் பாடலில் சாத்தானார் சொல்கிறார்.

பூம்புகாரில் பஞ்சம், மதுரையில் பஞ்சம், அது மட்டும்தானா. காஞ்சிபுரத்தில் கதி என்ன என்பதைப் பாருங்கள்.

வஞ்சி மாநகரில் தன்னை விட்டு விடைபெறவிருக்கும் பேத்தி

மணிமேகலையிடம்,மாசாத்துவான், "மணியிழையே, மழை வளம் இல்லாததால் காஞ்சி நாட்டிலே மன்னுயிர்கள் மடிகின்றன. அந்த நகரம் தன் அழகை இழந்துவிட்டது. மாதவம் செய்வோர்க்கு அன்னமிட யாரும் இல்லாததால் அவர்கள் அந்த நகரம் விட்டு நீங்கி வஞ்சிக்கு வந்து விட்டனர். ஆதலின் நீ காஞ்சி நாடு சென்று அதைக் காப்பாயாக"என்கிறார். கச்சி மாநகர் புக்க காதையில் வருகிறது இந்தப் பாடல்.

"அன்னதை யன்றியு மணியிழை கேளாய்
பொன்னெயிற் காஞ்சி நாடுகவி னழிந்து
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலின்
அந்நகர் மாதவர்க் கைய மிடுவோர்
இன்மையி னிந்நக ரெய்தினர் காணாய்
ஆருயிர் மருந்தே யந்நாட் டகவயின்
காரெனத் தோன்றிக் காத்தனின் கடனென" 28 (155 - 161)

'பஞ்சத்திலே அடிபட்ட காஞ்சி மாநகரம், தேவர்கோன் நகரம் மண்ணிலே கிடந்து போல் கிடந்தது. அதைக் கண்டு மணிமேகலையின் உள்ளம் கசிந்தது' என்கிறார் புலவர்.

"தேவர் கோமான் காவன் மாநகர்
மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய
பொன்னகர் வறிதாப் புல்லென் றாயது
கண்டுளங் கசிந்த வொண்டொடி நங்கை" 28 (166 - 169).

சரி. சோழநாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு என தமிழகத்தின் பெரும் பகுதியில் பஞ்சம் நிலவியது. இத்தோடு விட்டாரா சாத்தனார். இல்லை, கடலுக்கு அப்பால் உள்ள சாவக நாட்டிலும் பஞ்சம் இருந்ததை இந்தப்பாடலில் சொல்கிறார்.

"சாவக நல் நாட்டு தண் பெயல் மறுத்தலின்
ஊன் உயிர் மடிந்தது உரவோய்!" 14 (74- 75)

என்று கப்பலில் வந்தவர்கள் ஆபுத்திரனிடம் சொல்கிறார்கள்.

பாத்திர மரபு கூறிய காதையில் கூறப்படும் இந்தக் காட்சி மீண்டும் ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதையில் காட்டப் படுகிறது.

"எங்கோ வாழி யென்சொற் கேண்மதி
நுங்கோ னுன்னைப் பெறுவதன் முன்னாள்
பன்னீ ராண்டிப் பதிகெழு நன்னாடு
மன்னுயிர் மடிய மழைவளங் கரந்தீங்"25 (99 - 102).

அங்கே எப்படிப்பட்ட பஞ்சம் நிலவியது என்பதைக் காட்ட, சாத்தனார் ஒரு கொடுமையான காட்சியைக் காட்டுகிறார். தனக்குக் கிடைத்த உணவை, பசியால் அழுகின்ற குழந்தைக்குக்கூடக் கொடுக்காமல் தான் தனியே சாப்பிடுகிறாளாம் ஒரு தாய். அவ்வளவு கொடூரமான பசி.

"ஈன்றாள் குழவிக் கிரங்கா ளாகித்
தான்றனி தின்னுந் தகைமைய தாயது" 25 (103 - 104)

எவ்வளவுகொடுமை.

இதுதான் கொடுமை என்றால், மணிமேகலை நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த இராவ் பகதூர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் (1927) அவர்கள் இந்த வரிகளுக்கு ( 25 (99 — 104)) அளிக்கும் மொழிபெயர்ப்பு இன்னும் கொடுமையானது. நீங்களே படியுங்கள்.

"*Remember O, Great Monarch! That before my former sovereign and yours, obtained you for a son by favour of the holy one, the land of ours had suffered for twelve years from failure of rain and famine of such severity in consequence, that the very mothers would sooner eat their children, to appease their own hunger than feed them* ……"

பசி, பிணி, பஞ்சம் எல்லாம் பார்த்துவிட்டோம். இற்கான காரணம் நிச்சயமாக பருவநிலையில் ஏற்பட்ட பெரும் கோளாறாகத்தான் இருக்கும். அல்லவா, இதற்கான குறிப்புகள் ஏதேனும் காப்பியத்தில உள்ளனவா எனத் தேடியபோது, அறவணர்த் தொழுத காதையில் இந்தப் பாடல் கிடைத்தது.

"மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களும் ஞாயிறும் தீங்குறா விளங்கத்
தங்கா நாண்மீன் தகைமையின் நடக்கும்
வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்
ஊனுடை உயிர்கள் உறுதுயர் காணா
வளிவலக் கொட்கும் மாதிரம் வளம்படும்
நளியிரு முந்நீர் நலம்பல தரூஉம்
கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா
விலங்கு மக்களும் வரூஉப்பகை நீங்கும்
கலங்கஞர் நரகரும் பேயும் செவிடும்
கூனுங் குறளும் ஊமுஞ் செவிடும்
மாவும் மருளும் மன்னுயிர் பெறாஅ" 14 (85 -98)

பாடலை மீண்டும் ஒருமுறை படித்துவிடுங்கள். 'புத்த ஞாயிறு தோன்றும் போது இவை இவையெல்லாம் நடக்கும் என்கிறது பாடல். அப்படியென்றால் அவை அவையெல்லாம் அப்போது நடக்கவில்லைஎன்றுதானே பொருள்.

ஆதலின், மணிமேகலை காலத்தில்,

திங்களும் ஞாயிறும் தீங்குற்று விளங்கியிருக்கின்றன.
வானம் பொய்த்திருக்கிறது.
மாநிலம் வளப்படவில்லை.
ஊனுடை உயிர்கள் உறுதுயர் கண்டிருக்கின்றன.
காற்று வலமாக சுழலவில்லை.
திசைகள் செழித்திருக்கவில்லை.
கடல் வளம் பல தரவில்லை.

பசுக்கள் கன்றுகளை உண்ணச் செய்து கறவைக்கலம் நிறைந்து வழியுமாறு பால் பொழியவில்லை.
பறவைகள் தங்கள் இடம் விட்டு நீங்கியிருக்கின்றன.
மக்கள் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டியிருக்கிறார்கள்
நரகர் இனமும் பேயினமும் கலக்கத்திற்குக் காரணமாக இருந்திருக்கின்றன.
மக்கள் கூனாகவும், குறளாகவும், ஊமைகளாகவும் , செவிடுகளாகவும், விளக்கமான அறிவற்றவர்களாகவும் பிறந்திருக்கிறார்கள்.

இந்தப் பாடல் அந்நாளில் ஏற்பட்ட பருவநிலைக் கோளாறுகளையும் அதனால் நிகழ்ந்த விளைவுகளையும் சுட்டிக் காட்டுகிறது எனக் கொள்ளல் தகும்.

இனி இந்தப் பாடலையும் பார்ப்போம்

"தண் பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்
உண்டு என உணர்தல் அல்லது யாவதும்
கண்டு இனிது விளங்காக் காட்சி போன்றது" 12 (63 - 65)

''தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்........காட்சி போன்றது.''இந்தக் காட்சி, இந்த உவமை வேறுஎந்த இலக்கியத்திலாவது காட்டப்பட்டிருக்கிறதா?
கதிரவன்மறைக்கப்பட்டிருக்கிறான்.அதனால்தானோ என்னவோ,

''சுடர் வழக்கு அற்றுத் தடுமாறுகாலை ஓர்

இள வள ஞாயிறு தோன்றியதென்ன
நீயோ தோன்றினை நின் அடி பணிந்தேன்'' 10 (10 - 12)

மற்றும்

''இருள் பரந்து கிடந்த மலர் தலை உலகத்து
விரி கதிர்ச் செல்வன் தோன்றினன் என்ன'' 12 (75 - 76)

போன்ற உவமைகள் காப்பியத்தில் ஆங்காங்கு வந்து போகின்றன.

மணிமேகலை காப்பியம் நேரடியாகக் காட்டும் புவியியல் நிகழ்வு , கடல் சீற்றம்.காப்பியத்தில் கடல்கோள் பற்றிய குறிப்புகள் பல்வேறு காதைகளில் பரவிக் கிடக்கின்றன. நூலின் ஆசிரியர் சீத்தலை சாத்தனார், பல்வேறு கதாபாத்திரங்கள் வாயிலாகக் காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழிந்த செய்தியை நமக்குத் தெரிவிக்கிறார். பூம்புகார் நகரின் கடற்கரையில் உப்பளத்தின் அருகே மணற்குன்று ஒன்றில் வருந்திக் கொண்டிருந்த மன்னன் கிள்ளிவளவனைப் பார்த்து, சாரணர் ஒருவர்,
''-----உன் மாநகர் கடல் வயிறு புகூஉம்'' (24: 62-63)

என்று எச்சரித்ததாக மணிமேகலையின் பாட்டி சித்திராபதி, இராசமாதேவியிடம் கூறுகிறார். இந்தக் குறிப்பு 'ஆபுத்திரன் நாடு அடைந்த காதை' யில் காணப்படுகிறது.தொடந்து, மணிபல்லவத்தீவிற்கு ஆபுத்திரனோடு சென்ற மணிமேகலையிடம், அத்தீவிலிருந்த புத்த பீடிகையை காத்துவந்த தீவதிலகை,

''பலர் தொழு பாத்திரம் கையில் ஏந்திய மடவரல் நல்லாய்-

நிந்தன் மாநகர் கடல் வயிறு புக்கது'' (25: 174-176)என்றும்,

''வானவன் விழாக்கோள் மாநகர் ஒழிந்தது'' (25:197) என்றும்,

''விரிதிரை வந்து வியன் நகர் விழுங்க,

ஒருதனிப் போயினன் உலக மன்னவன்;

அருந்தவன் தன்னுடன், ஆய் இழைத் தாயரும்

வருந்தாது ஏகி, வஞ்சியுள் புக்கனர்'' (25: 203-206)

என்றும், கூறுகிறாள். இவை 'ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை' யில் வருகின்றன.

இதனை அடுத்து, வஞ்சி மாநகர் சென்று அங்கே தவ வாழ்க்கை மேற்கொண்டிருக்கும் தன் தாத்தா மாசாத்துவானை பார்க்கும் மணிமேகலை,

''-------மாநகர் கடல் கொள,

அறவண அடிகளும் தாயாரும் ஆங்கு விட்டு,

இறவாது இப்பதி புகுந்தது கேட்டு -----'', தான் இங்கு வந்துள்ளதாகக் கூறுகிறாள் .(28:79-82).

இதற்கு பதிலளிக்கும் மாசாத்துவான் ''காவரிப்பூம்பட்டிணம் கடல் கொள்ளும்'' (28: 135) என அறிந்தே தான் அங்கே செல்லாமல் வஞ்சியிலே தங்கிவிட்டதாகக் கூறுகிறார். இக்காட்சிகள் 'கச்சி மாநகர் புக்க காதையில்' காணக் கிடைக்கின்றன.இதனைத் தொடர்ந்து வரும் 'தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை'யில், வஞ்சி நகர் வந்து தன்னை வணங்கிய மணிமேகலையிடம், அறவண அடிகள் ''-----நகர் கடல் கொள்ள , நின் தாயரும் யானும் - இப்பதி படர்ந்தனம்'' .(29: 35-36) என்று கூறுவதாக, சாத்தனார் சுட்டிக் காட்டுகிறார் .இதுகாறும் எடுத்துக்காட்டிய மேற்கோள்களிலிருந்து, சீத்தலை சாத்தனார் வாழ்ந்த காலத்திலோ அல்லது அதற்கு சற்று முன்போ, காவேரிபூம்பட்டினத்தை கடல் கொண்டது என்று எண்ணத் தோன்றுகிறது.மணிமேகலையின் கதையை அல்லது வரலாற்றை கூற வந்த சாத்தனார் அந்தக் கடல்கோள் நிகழ்வினைக் கதையோடு இணைத்து காப்பியத்தை பாடியிருக்கிறார். கதை நிகழ்ந்த காலகட்டத்தில் நிலவி வந்த நம்பிக்கைகளுக்கேற்ப , இந்திரன் இட்ட சாபத்தின் காரணமாகக் கடல் கோள் நிகழ்ந்தது என்று காப்பியத்தின் பல பாகங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. ''ஆங்குவிட்டு இறவாது இப்பதி புகுந்தது கேட்டு'' எனும் தொடரின் மூலம் 'கடல்கோளில் பலர் இறந்திருக்கலாம்' எனும் எதிர் மறைச் செய்தியும் நமக்குப் புலனாகிறது.

சங்க காலத்திலும், பின் இந்த இரட்டைக் காப்பியங்கள் எழுந்த காலத்திலும் சிறந்த துறைமுக நகரமாகவும், மிகச் சிறந்த வணிகப் பெருநகரமாகவும் .திகழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்புப் பற்றிய குறிப்புகள், அதன் பின் தோன்றிய இலக்கியங்களில் அவ்வளவாக இல்லை. ஆதலின் மணிமேகலை காப்பிய காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் கடலுக்கு இரையானது என என்ன இடம் உள்ளது. அந்தப் பட்டிணம் துறைமுக நகரமாக இருந்தது என்பதற்கு தற்போது கிடைக்கும் தொல்லியல் ஆய்வுத் தடயங்கள் சான்று பகர்கின்றன.

சரி, காவிரிப்பூம்பட்டினம் மறைந்ததற்குக் காரணம்:, புயலால் எழுந்த அலைகளா, சுனாமி அலைகளா அன்றி ஹோலோசீன் கடல் மட்ட உயர்வா? நிச்சயமாக ஹோலோசீன் கடல் மட்ட உயர்வாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அது ஒரு நாளில் நடக்கும் நிகழ்வு அல்ல. ஆதலின் புயலோ அல்லது சுனாமியோதான் காரணமாக இருக்க வேண்டும்.

புயல் எனில் மழை பெய்திருக்கும், வறட்சி நீங்கியிருக்கும். ஆனால் காப்பியத்தின் பல பகுதிகளில் 'மழை வளம் கரந்த' நிகழ்வுதான் பேசப்படுகிறது. பருவநிலை மாற்றம் பற்றிய செய்தி பல இடங்களில் உள்ளதால் இது சுனாமியாக இருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

சுனாமியென்றால் அது பூம்புகாரில் மட்டும் நிகழ்ந்திருக்காது. கடற்கரையை ஒட்டியுள்ள வேறு பகுதிகளிலும் நிகழ்ந்திருக்கும். ஆனால் அன்று நிகழ்ந்த சுனாமிக்கு இன்று சான்றுகள் கிடைக்குமா?

பழங்காலத்தில் நிகழ்ந்த சுனாமிகளைக் கண்டறியும் ஆய்வுகள் கடந்த பல ஆண்டுகளாகவே உலகின் பல பாகங்களில்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அது அவ்வளவு எளிதாக இல்லை. கடந்த 26.12.2004 சுனாமிக்குப் பிறகு, நம் நாட்டிலும் இத்தகைய ஆய்வுகள் நடைபெற்றன.

மாமல்லபுரத்தில்நடைபெற்ற ஆய்வு முடிவுகள், இந்தப் பகுதியில் 1000 ஆண்டுகளுக்கு முன்பும் மற்றும் 1500 ஆண்டுகளுக்கு முன்பும் கடல்நீர் உட்புகுந்ததற்கானசாத்தியக் கூறுகள் உள்ளதாகத் தெரிவிக்கின்றன. இந்த செய்தி அறிவியல் இதழான கரண்ட் சயின்ஸில் வெளியாகியுள்ளது. (*Evidence of ancient sea surges at the Mamallapuram coast of India and implications for previous Indian Ocean tsunami events. C.P.Rajendran, Kusala Rajendran, Terry Machado, T. Satyamurthy, P.Aravazhi and Manoj Jaiswal 'Current Science Vol. 91, No. 9 (10 November 2006), pp. 1242-1247*).

மாமல்லபுரத்தில், பத்து அடிக்கும் கீழ் மணலில் புதைந்திருந்த மரபுச் சின்னங்களைப் பற்றிப்பேசும் ஆய்வாளர்கள், "*These structures were destroyed by the coastal flooding during 950 AD and between 320 and 560 AD, as evident found from the stratigraphy*"என்று குறிப்பிடுகிறார்கள். (*Shoreline changes along Tamil Nadu coast: A study based on archaeological and coastal dynamics perspective Sundaresh*, R. Mani Murali, Jaya Kumar Seelam& A.S. Gaur CSIR-National Institute of Oceanography, Dona Paula, Goa, Indian Journal of Geo-Marine Sciences Vol. 43(7), July 2014, pp. 1167-1176.*)

மணிமேகலையின் காலம் பற்றிப் பலவேறுகருத்துகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, அது 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது என்பது. மேற்சொன்ன இரண்டு மேற்கோள்களையும் மணிமேகலை கூறும் கடல் சீற்றத்தோடு இணைத்து பார்க்கும்போது, நாம் பேசிக் கொண்டிருப்பது கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நடந்த சுனாமியே என்னும் முடிவிற்கு வர வேண்டியதாகியுள்ளது. இது சரி எனக் கொண்டால், மணிமேகலை காட்டும் பருவநிலை மாற்றங்களுக்கும் நமக்கு விடை கிடைக்கிறது.
கடலின் கீழ் நிகழும், ரிக்டர் அளவில் 7.2 ற்கும் அதிகமானபெரும் நிலநடுக்கங்கள், மிகப் பெரும் எரிமலை சிதறல்கள், பெரும் நிலச் சரிவுகள் இவைகளால் மட்டுமே சுனாமியை உருவாக்க முடியும். இவற்றுள் முதல் இரண்டும் பூமியின் தட்டு விளிம்புகளில் (*PLATE TECTONICS — PLATE MARGINS*) மட்டுமே நிகழக் கூடியவை. ஆறாம் நூற்றாண்டில் தமிழகக் கடற்கரையை சுனாமி தாக்கியது எனக் கொண்டால், இந்தக் கடற்கரைக்கு அருகில் ( 2200 கி.மீ. தொலைவில்) உள்ள, அந்தமான்- நிக்கோபார்- இந்தோனேஷியா தீவுகளை தன்னகத்தே கொண்ட தட்டு விளிம்பில் பெரும் நில நடுக்கமோ, எரிமலை சிதறலோ நடந்திருக்க வேண்டும். அல்லவா. (இந்த நேரத்தில், ஜாவாவிலும் (சாவகம்) மழை பொய்த்தது, பஞ்சம் நிலவியது என்று மணிமேகலை கூறுவது நம் நினைவிற்கு வருகிறது).முதலில் நிலநடுக்கம் குறித்துப் பார்ப்போம். சங்க இலக்கியங்கள் தொட்டுஎந்த இலக்கியத்திலும் நிலநடுக்கம் பற்றிய குறிப்பு இல்லை, மணிமேகலைத் தவிர. 'நிலம் புலம்

பெயரினும்', 'நிலம் பெயர்வதாயினும்', 'புலம் பெயரினும்' போன்ற தொடர்கள் நெடுநல்வாடை, புறநானூறு, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் காணப்பட்டாலும், இவை எதுவுமே, நிலநடுக்கத்தை குறிப்பதாக இல்லை.

மணிமேகலையோ இரண்டு இடங்களில் நில நடுக்கம் நிகழ்ந்த செய்தியை சொல்கிறது. பீடிகை கண்டு காதையில், காந்தார நாட்டு மன்னன் அத்திபதியிடம் அவன் மைத்துனன், பிரம தருமன்,

"இன்னும் ஏழு நாட்களில் நாகநாட்டில் நிலநடுக்கம் ஏற்படும். அப்போது அந்த நாட்டில் நானூறு யோசனை தூரமும், உன்னுடைய இந்த நகரமும் பாதாளத்திற்குப் போய் பாழ்படும்"என்கிறான்.


"காந்தார மென்னுங் கழிபெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறைகெட வாழும்
அத்தி பதியெனும் அரசாள் வேந்தன்
மைத்துன னாகிய பிரம தருமன்
ஆங்கு அவன் தன்பால் அணைந்து அறன் உரைப்போய்
தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை
இன்றேழ் நாளில் இருநில மாக்கள்
நின்றுநடுக் கெய்த நீணில வேந்தே
பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்
நாகநன் னாட்டு நானூறி யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்." 9 (12 — 22)

அவன் சொன்னது அப்படியே நிகழ்ந்ததாகவும் காப்பியம் சொல்கிறது.

"எம் கோன் நீ ஆங்கு உரைத்த அந் நாளிடைத்
தங்காது அந் நகர் வீழ்ந்து கேடு எய்தலும்" 9 (31 — 32)

காந்தாரம் என்பது "*an ancient kingdom of the Peshawar Valley, extending between the Swat valley and Potohar plateau regions of Pakistan as well as the Jalalabad district of northeastern Afghanistan.*"என்றுவிக்கிபீடியா சொல்கிறது. படங்களையும் பாருங்கள். பெரிய நிலநடுக்கங்கள் நிகழும் இடமாக காந்தாரம் விளங்குகிறது




அடுத்து நாகநாடு எங்கே இருந்தது ? இது குறித்தும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. விக்கிபீடியா தரும் விளக்கங்களை அப்படியே நகலெடுத்து ஒட்டியுள்ளேன். பாருங்கள்.

1. நாகநாடு என்பது தற்போதுள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளை உள்ளடக்கமாகக் கொண்ட ஒரு பெருநிலப் பகுதி. அதன் தீவுகளில் ஒன்று மணிபல்லவம். இவை சங்ககாலத்துக்குப் பின்னர், கோவலனின் மகள் மணிமேகலை வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த நிலநடுக்கத்தின்போது கடலால் கொள்ளப்பட்டது.

2. நாகநாடு என்பது இலங்கையின் வடபகுதியில் அமைந்திருந்த நாகர் அரசு ஆகும். விஜயனும் அவனது தோழர்களும் இலங்கைத் தீவுக்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் இயக்கர் என்றும் நாகர் என்றும் இரு இனக் குழுவினர் வாழ்ந்ததாக மகாவம்சம் கூறுகிறது. அத்துடன் மணிபல்லவம் என்பது இன்றைய நயினாதீவு ஆகும். இத்தீவைச் சிங்களத்தில் நாகதீப, அதாவது நாகர்தீவு என அழைக்கப்படுகிறது. இங்கேதான் அரியணைப் போட்டியைத் தீர்த்து வைக்க புத்தர் வந்ததாக இலங்கையின் பண்டைய வரலாற்று நூலான மகாவம்சம் குறிப்பிடுகிறது.

இன்றைய நில நடுக்கவியல் அடிப்படையில் பார்க்கும் போது, நாகநாடு என்பது அந்தமான் - நிக்கோபார் தீவுப் பகுதியே என்று எண்ணத் தோன்றுகிறது காப்பியத்தில் காட்டப்படும் இரண்டு இடங்களுமே அடிக்கடி நிலநடுக்கத்திற்கு உள்ளாகும் பகுதிகள் என்பதால், சாத்தனார் சொல்வதைக் கற்பனை என்று புறந்தள்ள முடியாது.மணிமேகலையில் சுனாமி, நிலநடுக்கம் போன்ற புவியியல் நிகழ்வுகள்எப்படிக் காட்டப்பட்டுள்ளன எனப் பார்த்தோம். இனி, எரிமலை சீற்றம் குறித்த குறிப்புகள் ஏதும் உள்ளனவா என்று ஆய்ந்த போது, நேரடி குறிப்புகள் ஒன்றும் கிடைக்கவில்லை.

தமிழகத்தில் மட்டுமல்லாது இங்கிருந்து 3700கி.மீ. தொலைவில் உள்ள சாவகத் தீவிலும் பஞ்சம் நிலவியது என்று மணிமேகலை காட்டும் நிகழ்வை ஒரு சாதாரண நிகழ்வாக எடுத்துக்கொள்ள இயலவில்லை. இந்தப் பருவநிலைக் கோளாறு என்பது உலகளாவிய ஒன்றாக இருக்குமோ எனும் ஐயம் எழுகிறது.

கி.பி. 535 — 536 இல் உலகின் பல பாகங்களில் பருவநிலைக் கோளாறுகள் ஏற்பட்டற்கு பல்வேறு சான்றுகள் உள்ளன. விக்கி பீடியாவில் இது குறித்து கிடைக்கும் தகல்வல்களைப் பாருங்கள்.

*The Byzantine historian Procopius recorded of 536, in his report on the wars with the Vandals, "during this year a most dread portent took place. For the sun gave forth its light without brightness ... and it seemed exceedingly like the sun in eclipse, for the beams it shed were not clear"*

(தண் பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்
உண்டு என உணர்தல் அல்லது யாவதும்
கண்டு இனிது விளங்காக் காட்சி போன்றது" 12 (63 — 65) எனும் மணிமேகலை வரிகள் இங்கே நமக்கு நினைவிற்கு வருகின்றன.)

*The Gaelic Irish Annals record the following:*

- *"A failure of bread in the year 536 AD" — the Annals of Ulster*
- *"A failure of bread from the years 536—539 AD" — the Annals of Inisfallen*

( காப்பியம் காட்டும் உணவுப் பஞ்சம் இங்கே நம் கண்முன் வந்து நிற்கிறது )

ஆய்வாளர் *Ken Wohletz (Los Alamos National Laboratory*) இந்த ஆறாம் நூற்றாண்டின் நிகழ்வைப் பற்றிக் கூறும்போது மரங்களில் உள்ள வட்ட வளையங்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்பாட்ட ஆய்வுகள் அண்டார்டிக்கா பனிப்பாறையில் துரப்பணப்பணி மூலம் நடை பெற்ற ஆய்வுகள் இவற்றின் மூலம் கி.பி. 535 — 536 ஆண்டுகளில் பருவநிலைக் கோளாறு ஏற்பட்டது உறுதியாகிறது, உலகின் பல பாகங்களில் இதற்கான சான்றுகள்

கிடைத்துள்ளன என்கிறார். அவர் கொடுத்துள்ள உலகப் படத்தில் இந்தியாவிலிருந்து எந்த சான்றும் காட்டப்படவில்லை. அதுசமயம், பயிர்த் தொழில் பொய்த்தது, கடும் பஞ்சம் ஏற்பட்டது கொள்ளை நோய்கள் பரவின என்று கூறும் அவர், அதே சமயம் உலகளாவிய அளவில் அரசியலிலும் மதத்திலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன என்கிறார். *David Keys* எனும் ஆய்வாளர் தன் *CATASTOPHE(CENTURY, LONDON,* **1999**) எனும் நூலில் இதே கருத்தை எழுதியிருக்கிறார்.

இத்தகைய உலகளாவிய பருவநிலை கோளாறு ஏற்பட இரண்டே காரணங்கள்தான் இருக்க முடியும்.முதலாவது ஒரு பெரும் விண்கல் அல்லது வால் நட்சத்திரம் பூமியைத் தாக்கியிருக்க வேண்டும். ஆனால், இதற்கான சான்றுகள் பூமியின் பரப்பில் ஏதும் இல்லை, அத்தகைய விண்கல் கடலில் விழுந்திருந்தால் விவரிக்கவொண்ணா அளவிற்கு பேரலைகள் எழுந்திருக்கும், தூசுப் படலமும் இந்த அளவிற்கு எழுந்திருக்காது, ஆதலின் இதற்கு விண்கல்லோ, வால் நட்சத்திரமோ காரணமாக இருக்காது என்கிறார்கள் வானியல் ஆய்வாளர்கள்.

இரண்டாவது, எரிமலை வெடிப்பு. அண்டார்டிக்காவிலும், க்ரீன்லாந்திலும் போடப்பட்ட துளைக் கிணற்றில் கிடைத்த பனிப்பாறை மாதிரிகளில் கிபி.**535** வாக்கில் பெரும் எரிமலை வெடிப்பு நிகழ்ந்ததற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆறாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இடியோசை போன்றதொரு பெரும் ஓசை எழுந்ததாக சீன இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஓலைச்சுவடிகளில் உள்ள சாவக நாட்டு வரலாற்று நூலாகிய *PUSTHAK RAJA PURWA ( THE BOOK OF ANCIENT KINGDOM*) கி.பி. **416** ஆம் ஆண்டில் சுமத்ரா தீவின் தென்கிழக்குப் பகுதியில் க்ரகட்டோவ் வெடித்து சிதறியதாகக் கூறுகிறது. ஆண்டுகளைக் கணக்கிடுவதில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக, கி.பி. **535** என்பது கி.பி. **416** எனக் குறிப்பிடப் பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஆக, ஆறாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் நிகழ்ந்த க்ரகட்டோவ் எரிமலை வெடிப்பு காரணமாக, ஒரு குறுகிய காலத்திற்கு பருவநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது, பயிர்த் தொழில் நசிந்தது, பஞ்சம் ஏற்பட்டது, பசி-பிணி இவை மலிந்தன என்று அறிய முடிகிறது.

மணிமேகலை காட்டும் நில நடுக்கம், ஆழிப் பேரலை, பஞ்சம், பசி, பட்டினி, பிணி இவையனைத்தும் இவற்றுடன் ஒப்புநோக்கும் வகையில் அமைந்துள்ளன. இதுதான் மணிமேகலை காட்டும் பூகோளம். (மேலும் விவரம் அறிய விரும்புவோர் படங்களைப் பாருங்கள்)

இந்தக் காலத்தைத் தொடர்ந்து உலகின் பல பகுதிகளில் அரசுகள் வீழ்ந்தன, மதங்கள் வீழ்ந்தன. புதிய அரசுகளும்,மதங்களும் தோன்றின என்று ஆய்வாளர்கள் எழுதுகிறார்கள். நம் தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசு எழுச்சியுற்ற காலம் ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியே; புத்தமும் சமணமும் நலிந்து சைவம் தழைக்கத் துவங்கியதும் இந்தக் காலமே.

**1.**படம்: இணையத்திலிருந்து.
**2.***Source: Were the Dark Ages Triggered by Volcano-Related Climate Change?*
**3.***Ken Wohletz Los Alamos National Laboratory*
**4.**மணிமேகலை
**5.**சிலப்பதிகாரம்
**6.**மகாவம்சம்